# தமிழ் கலைகள் மற்றும் படைப்புகள் (நாடகங்கள்)

# Tamil Arts and Works (Drama)

**சு. ஆறுமுகம்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பெரியார் சிந்தனை உயராய்வு மையம்

**முனைவர் ந. லெனின்**
உதவிப்பேராசிரியர் (SS) ஆய்வு நெறியாளர்
மொழிகள் துறை, பெரியார் மணியம்மை
அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்
வல்லம், தஞ்சாவூர்

**S. Arumugam**
*Ph.D. Researche Scholar*
*Periyar Thought Centre for Higher Studies*

**Dr. N. Lenin**
*Assistant Professor (SS), Research Coordinator*
*Department of Languages*
*Periyar Maniammai Science and Institute of Technology, Vallam, Thanjavur*

### ஆய்வுச் சுருக்கம்

*விளக்கமும் செயல்பாடுகளும் - நாடகம் முதலில் தோன்றிய நாடு - தமிழில் நாடகத் தோற்றம் - நாடகப் பாடல்கள் - அரிச்சந்திரா நாடகத்தில் - நாடக ஆய்வு - நாடக காலப் பகுதிகள்.*

### Abstract

*Description and Functions & Country of Origin of Drama & Origin of Drama in Tamil & Drama Songs & Arichandra in Drama & Study of Drama & Period Pieces of Drama.*

**Citation**

Arumugam, S. and Lenin, N. "Tamil Arts and Works (Drama)." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 40–47.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095857*

**முன்னுரை**

*இருபதாம் நூற்றாண்டு நாடகத் தமிழின் பொற்காலம் ஆகும். வானொலி நிலையங்கள் நாளும் நல்ல நாடகங்களை ஒலிபரப்பி வருகின்றன. கலைத்துறைக்குத் தனி வாரியம் போல தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் என்ற ஓர் அமைப்பை ஏற்பாடு செய்துள்ளது. பல்கலைக் கழகங்களில் - கல்லூரிகளில் - பாடத் திட்டங்களில் நாடகம் என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாடகங்கள் எம்.ஃபில், பி எச்.டி போன்ற ஆய்வுப் பட்டங்களுக்கு ஆய்வுத் தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டு ஆராயப்பெற்று வருகின்றன.மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் பெயரால் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.தமிழ்ப் பல்லைக்கழகத்தில் நாடகத்திற்குத் தனித்துறை ஏற்படுத்தப்பெற்றுள்ளது. தமிழில் நாடகத் தோற்றத்தை அறியும் ஒவ்வொருவரும் உலகில் நாடகத் தோற்றம் எவ்வாறு இருந்தது என்பதனை அறியவேண்டும்.*

*நாடகம் நாட்டிற்கு அணிகலன், நாகரிகத்தின் அளவுகோல் நாட்டின் பிரதிபலிப்பு, பாமரர்களின் பல்கலைக்கழகம், சமுதாயச் சீர்கேடுகளைத் தகர்க்கும் வாள்வீச்சு, இதய நாதத்தின் எழுச்சி, காலத்தின் கண்ணாடி, இலட்சியக் கனவுகளையெல்லாம் ஈடேற்றி வைக்கும் அற்புத சாதனம், வாழ்க்கையின் விளக்கம். வரலாற்றின் பொன்னேடு, கற்பனை கருவூலங்களை விளக்கும் அற்புத ஒளிவிளக்கு. உலகக் கலை அனைத்தையும் தன்னகத்தே கொண்ட உயிரோவியம் என்பார் கு.சா.கிருஷ்ணமூர்த்தி (தமிழ் நாடக வரலாறு) ஒரு விஷயத்தைச் சொல்லால் விளக்குவது இயல், பாட்டால் விளக்குவது இசை, நடிப்பால் விளக்குவது நாடகம் என்பார் ஆறு.அழகப்பன்.*

***“எனக்குச் சங்கத்தமிழ் மூன்றும் தா”***

*என்று அவ்வையாரும் வேண்டுகிறார்.*

*நாடகம் என்பது ஒரு கலை அல்லது பல வகைக் கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாட்டு + அகம் = நாடகம். அதாவது நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை, கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம். இவற்றை எழுதுபவர்கள் நாடகாசிரியர் என அறியப்படுவார். தமிழ் நாடகத் தந்தை என பம்மல் சம்பந்தனார் அழைக்கப்படுகிறார்.நாடகக் கலைக்கு வித்திட்டவர் சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். நாடகக் கலைக்கு சிறப்பானதொரு பங்களிப்பைத் தந்தவர் டி.கே.சண்முகம் ஆவார். நாடகக் கலை மூலம் தமிழ் மொழி வளர்ச்சி பெற்றது.*

**விளக்கமும் செயல்பாடுகளும்**

*இயல் என்பது சொல்வடிவம், “இசை” என்பது சொற்களோடு இசையும் சேர்ந்த வடிவம், நாடகம் என்பது, இயல்இசை மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவம். உலகமே ஒரு நாடக மேடை என்றார் சேக்ஸ்பிரியர். உலகில் நாடகங்கள் பல வகைகளாக நடத்தப்படுகின்றன. தமிழை தமிழகத்தினை பொருத்தமட்டில் நாடகம் என்பது தெருக் கூத்து மற்றும் பாவை நாடகங்களாக நடத்தப்படுகின்றன.*

**நாடகப் பாடல்கள்**

*நாடகத்தில் பாடப்பெறும் பாடல்கள் நாடக நடிகர்களால் மனப்பாடமாக பாடப்படுபவை அப்பாடல்கள் உணர்ச்சிப்பூர்வமாக கதையின் உயிரோட்டத்தை உணர்த்துபவை. பார்வையாளர்கள் கேட்ட மாத்திரத்தில் சுவைத்து மகிழும் ஆற்றல் பெற்றவை.*

***ஸ்ரீ கிருஷ்ணலீலா நாடகத்தில்***

***ஆண்***

***காமி சத்யபாமா கதவை திறவாய்***

***எந்தன் காமி சத்யபாமா கதவை திறவாய்***

***காமி சத்யபாமா கதவை திறவாய்***

***ஆண்***

***தாமதம் செய்தால் இனிதாளேன் மனமோகினி***

***தாமதம் செய்தால் இனிதாளேன் மனமோகினி***

***தயவை புரிவாய் நீ கண்மணி***

***தயவை புரிவாய் நீ கண்மணி***

***கண்மணி கண்மணி கண்மணி***

***அரிச்சந்திர நாடகத்தில்***

***மாண்டாயோ மகனே***

***உடையப்பா குழுவினரின்***

*அரிச்சந்திரா நாடகப்பாடல்கள் மக்கள் மனதில் பாடல் மொழித் திறனை வளர்த்தது.*

*ஒரு கதையின் வரலாற்றைத் திரை, உடை, நடை பாவனையாலும் இனிய கீதங்களாலும் இடத்திற்குத் தகுந்தபடி வசனத்துடன் இயற்கையாக நடத்தப்படுவதே நாடகம். தெருக்கூத்தில் இடம் பெறும் பாடல்கள் பல்லவி, அனுபல்லவி போன்ற அமைப்பு இல்லாது இருக்கும். அவை தருக்கள் எனப்படும். இடையிடையே தாளக்கட்டுடன் பாடல் வசன நடையில் இருக்கும். இதனை வசன நடை என்று கூறுவர். சங்கரதாஸ் சுவாமிகளின் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் இடம் பெற்றுள்ள மன்னா என் ஆசை மறந்திடாதீர் என்ற பாடல் இதற்கு ஒரு சான்றாகும். சில பாடல்களை உச்ச ஸ்தாயில் இழுத்துப் பாடுவார்கள். உதாரணமாக வள்ளி திருமணத்தில் இடம்பெற்றுள்ள ''ஆயலோட்டும் பெண்ணே'' என்ற பாடலைக் கூறலாம்.*

***''காயாத கானகத்தே***

***நின்றுலாவும் நற்காரிகையே***

***மேயாத மான் புள்ளி***

***மேவாத மான்***

***சாயாத கொம்பு இரண்டு***

***இருந்தாலும் - அது என்***

***தலை நிமிர்ந்து பாயாத மான்''[1]***

*காஞ்சித்தலைவர் மூன்று கட்டளைகள் காதலோ காதல் கலைவாணரின் கிந்தனாரும் ஐம்பதும் அறுபதும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.[2]*

***பிங்கலர் தமது நிகண்டு நூலில்***

***இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ்என***

***வகைப்படச் சாற்றினர் மதியுர் தோரே (பிங்க. 1332)***

*என இதனை வகுத்துரைக்கின்றார்.*

*நாடகத் தமிழை வளர்ப்பதற்கென்று தமிழ் வாணர்கள் தனித்தனி நாடகக் கழகங்களும் அரசியலார் நாடகச் சங்கங்களும் ஏற்படுத்தியுள்ளனர்.*

**நாடக ஆய்வு**

*நாடகவாணர்களால் பண்டு தொட்டு இன்றுவரை இத்தமிழ் வளர்க்கப்பட்டு வந்தது என்பதனை காலங்கள் நமக்கு காட்டுகின்றன.நாடகத்துறை அறிஞர்களால் ஆராயப்பட்டு வருகின்றன. பம்மல் சம்மந்த முதலியார் நாடகங்களையும் திரு.எ.ஜனார்த்தனம், அறிஞர் அண்ணாதுரை நாடகங்களையும் குரு குமரவேல் அவர்கள் ''தமிழ் இலக்கியங்களில் நாடகங்கள்'' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்துள்ளார். பம்மல் சம்பந்த முதலியார் அவர்களின் ''நாடக மேடை'' நினைவுகள் (போகம்) திரு.வி.கோ.சூ அவர்களின் நாடக இயல் திரு.ஔவை சண்முகம் அவர்களின் ''நாடகக்கலை'', ''எனது நாடக வாழ்க்கை'', திரு.எஸ்.வி.சகஸ்ர நாமம் அவர்களின் ''நாடக வரலாறு'' குரு சங்கரதாஸ் சுவாமிகள் மணிவிழா மலர்கள் முதலியன ஆகும்.*

**நாடக காலப்பகுதிகள்**

*(1) அகத்தியர் காலத்தில் நாடகம் (2) தொல்காப்பியர் காலத்தில் நாடகம் (3) சங்க காலத்தில் நாடகம் (4) சங்கம் மருவிய காலத்தில் நாடகம் (5) பல்லவர் காலத்தில் நாடகம் (6) சோழர் காலத்தில் நாடகம் (7) நாயக்கர், மராத்தியர் காலத்தில் நாடகம் (8) ஆங்கிலேயர் காலத்தில் நாடகம் (9) விடுதலைக்குப்பின் நாடகம் என காலப்பகுதிகள் பிரிக்கப்பட்டன. சோழ மன்னர்கள் நாடகத்திற்குச் செய்த தொண்டுகள் அளப்பரியன. தலைக்கோல் கொடுத்தல், தலைக்கோலி என்னும் பட்டம் வழங்குதல் போன்ற நாடக ஊக்கங்கள் அளிக்கப்பட்டன. நாட்டியம் கலந்த மேடை நாடகக் கலை மிகச்சிறப்பாக இருந்நது. அதுவே நாடகம் என்று போற்றப்பட்டது.*

**நாடகம் முதலில் தோன்றிய நாடு**

*உலகிலேயே ஆதியாக எகிப்திய நாட்டிலேயே நாடகக் கலை தோன்றியதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. கி.மு.3000 வரையிலும் எகிப்திய பிரமிடுகளிலிருந்தும் சவக் கல்லறைகளிலிருந்தும் 55 நாடகங்கள் கிடைத்திருப்பதாக மாஸ்பரோ என்ற ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்.3*

**தமிழில் நாடகத்தோற்றம்**

*நாடகக் கலையின் வளர்ச்சியும் வேகமும் இன்று மிகுதி தமிழ் பேசும் இந்நிலம் மட்டுமின்றி அயன்மொழி நிலத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்தால் கூட அங்கும் இக்கலை இன்று பக்குவமான வளர்ச்சிகளைப் பெற்றிருக்கின்றது.சான்றாகக் கன்னடமொழி நிலமான பெங்களூரில் பல நாட்கள் தமிழ் நாடகம் நடைபெறக் காண்கிறோம்.சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் தொடர்ந்து நாடகங்கள் நடைபெறுகின்றன.*

**நாடகமேடையில் சீர்திருத்தங்கள்**

*தமிழ்நாட்டு நாடக மேடையில் சீர்திருத்தங்கள் வேண்டும் என எதிர்பார்த்தபோது மகாராஷ்டிரத்திலிருந்து நாடகக் குழுக்கள் தமிழ்நாட்டிற்கு வந்து நாடகங்கள் நடத்தின. அவை மேடை நாடகங்களில் புதுவழி காட்டின. அதற்கு முன் மேடை நாடகங்களில் பாட்டின் ஆதிக்கமே மிகுதியாக இருந்தது. நடிப்பிலும் புதுமை ஏற்பட்டு வாழ்க்கையை ஒட்டியே நடிப்பு அமைந்தது. இம்மாறுதல்கள் தமிழ் மரபுவழி கெடாமல் தோன்றிய மாறுதல்களாகவே மேடை நாடகத்தாரால் பின்பற்றப்பெற்றன.அமெச்சூர் நாடகக் குழுக்களும் இம்மாறுதல்களால் வளர்ந்தன. கல்வியாளர்கள், வழக்கறிஞர்கள், கற்ற பெருமக்கள் நாடகம் எழுதவும், நடிக்கவும் முற்பட்டமையால் நாடகத்திற்கு ஒரு மேம்பட்ட நிலை ஏற்பட்டது.*

**நாடகத்தின் பரிமாணம்**

*வரலாற்று நாடகங்கள் சீராக வளர்ந்து ஔவை சண்முகம் அவர்களின் இராசராச சோழன் நாடகத்தின் மூலம் உச்ச நிலையை அடைந்தது. தமிழ் பண்பாடு வீரம், இலக்கியம் இவற்றை நன்கு குழைத்துத் தந்த நாடகம் இது. இவ்வழியில் திரு.மனோகர் அவர்கள் நாடக உலகில் அடியெடுத்து வைத்தார். அப்போது திரைப்படத்தின் நுட்பங்கள் இலக்கணங்கள் முதலியன புகுந்து நாடகத்தைப் பாதி திரைப்படம் போன்ற உணர்வை ஊட்டின. நாடகக்கலையின் இலக்கணம் வேறு. திரைப்படக் கலையின் இலக்கணம் வேறு.திரைப்பட அமைப்புகள் மேடை நாடகங்களில் புகுந்த போது நாடகக் கலையின் போக்கு வேறு திசைக்குத் திரும்பியது. சாக்ரடீசுக்கு நஞ்சு கொடுக்கும் பொழுது அது நஞ்சன்று என்றும், நஞ்சுண்பவர் சாக்ரடீசு அல்லர் என்றும் நமக்குத் தெரியும், இருந்தும் நாம் அக்காட்சியில் நம்மை இணைத்துக் கொள்கிறோம். இவ்வாறு நடிப்பவரையும் காண்பவரையும் இணையுமாறு செய்வதே இக்கலையின் உயரிய ஆற்றல்.*

**பிற்போக்கான பரிணாமம்**

*தெருக்கூத்துக் கலையிலிருந்து பல்வேறு நுட்பங்களையும் மெருகினையும் பெற்று வளர்ந்த இந்நாடகக்கலை ஓர் உச்சத்தை அடைகிறது நடிகர்கள், பார்வையாளர்கள் ஒருவிதமான மாற்றத்தை விரும்புகின்றனர். அவர்களுக்குப் பழைய தெருக்கூத்தில் ஓர் ஆசை பிறக்கிறது. உச்சத்தை அடைந்த இக்கலைவாணர்கள் மீண்டும் தெருக்கூத்தை விரும்பத் தொடங்குகிறார்கள். இம்மாற்றத்தை பிற்போக்கான பரிணாமம் எனலாம்.*

**நாடகப் பிரிவுகள்**

*நாடகம் என்ற பயன்தரும் மரத்திலிருந்து பல கிளைகள் தோன்றி வளர்ந்த வகையினை வெடிக்கும் பரிமாணத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தெருக்கூத்துப் போல இருந்து வந்த இக்கலை, மேடை, ஒழுங்கு, காட்சியமைப்பு பெற்று பல நாடகப் பிரிவுகளாக உருப்பெற்றது.*

**நாடகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெருக்கூத்து (வள்ளித் திருமணம்) | இதிகாச நாடகம் (மகாபாரதம்) | பக்தி நாடகம் (சிறுத்தொண்டர்) | வரலாற்று நாடகம் (இராசராச சோழன்) | கற்பனை நாடகம் (வேதாள உலகம்) | |
| இலட்சிய நாடகம் (அரிச்சந்திரா) | சமுதாய நாடகம் (வேலைக்காரி) | சமுதாய சீர்திருத்த நாடகம் (இரத்தக்கண்ணீர்) | தேசிய நாடகம் (கதரின் வெற்றி) | நகைச்சுவை நாடகம் (சபாபதி) | பிரச்சார நாடகம் (ஐம்பதும் அறுபதும்) |

*மேற்காட்டிய வரைபடத்தை நோக்கினால் முதுகு நாணிலிகளின் வளர்ச்சி காலத்தில் வகுப்புகள் கோத்திரம் முதலியன பரிணமித்ததைப் போல் நாடகத்தின் வளர்ச்சி காலத்திலும் பல்வேறு நாடக வகைகள் பிறந்தன என்பது வெளிப்படும்.4*

**இலக்கியம், கலை**

*இந்நான்கு கோடுகளில் பண்பாட்டுத்துறை உணர்வு என்பது இலக்கியம், கலை என்னும் இரண்டையும் உள்ளடக்கியது.*

**பண்பாட்டுத்துறை**

| இலக்கியம் | கலை |
|---|---|
| வசனம் | இசை |
| கவிதை | நாட்டியம் |
| நாடகம் | நாடகம் |
| திறனாய்வு | ஓவியம் |
| | சிற்பம் |

*இலக்கியம், கலை என்ற இரண்டிலும் இணைந்த ஓர் அற்புதமான கலை நாடகக்கலை.5 கலை என்பது ஒருவகை ஆற்றல் குறிப்பிட்ட ஒரு வழியை மேற்கொண்டு முன்னரே கலைஞர் மனதில் தோன்றிய ஒரு பயனைப் பிறர் அறியச்செய்யும் ஆற்றலே ஆகும் என்பது அறிஞர் ஆபர்கிராம்பியின் கருத்தாகும்.*[6]

*இதனால் கலை என்பது பொழுது போக்கிற்காக ஆக்கப்படுவது என நினைத்தல் கூடாது. மனித மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் தன்மைகள் தத்துவத்தை, முருகியலை நெறிப்படுத்துவது கலையின் இயல்பு ஆகும்.*

*கலையின் தோற்றத்திற்குக் காரணம் கூறும்பொழுது, ஒரு மனிதன் தன்னைப் பற்றி ஆராய பல வழிகளைக் கையாளுகிறான் அவற்றுள் ஒன்று அறிவு, மற்றொன்று நடைமுறை.*[7] *இவற்றுள் முன்னையது அறிவியல் துறையின்பாலும், ஏனையது செயலின்பாலும் அடங்கும். இரண்டாவதாகக் கூறப்பட்ட இயல்பே கலையின் தொடக்கமாகும்.*

**எஸ்.வி.சகஸ்ரநாமம் கருத்து**

*நாடக இலக்கியத்திற்கு ஆதாரமாக நாட்டியக் கலையே இருந்திருக்கக் கூடுமெனத் தெரியவருகின்றது. அரசனது அவையில் குறிப்பிட்ட சில மனிதர்களுக்கென நடத்தப்பட்ட கேளிக்கை விழாக்களில் நாட்டியம் முதலிடம் பெற்றிருக்கிறது. பின்னர் இதுவே ஒரு சமுதாய நீதியை - வாழ்க்கைக்கு ஒரு படிப்பினையைப் புகட்டக்கூடிய கதையம்சத்தோடு சம்பவச் சேர்க்கைகளாலான தொகுப்பாக மாறியிருக்கக்கூடும் அதற்கு ஒரு பரிணாம மாற்றமே நாடகக் கலையின் ஆரம்பக்கட்டம் என்று தெரியவருகிறது. விஞ்ஞான ரீதியாக காலதேச பேதங்களுக்கு ஏற்றபடித் தன்னை மாற்றிக்கொள்ளாத எந்த ஜீவராசியும் எப்படி உயிர்வாழ முடியாதோ அதே போன்று கலை, இலக்கியத் துறையிலும் மாறும் சமுதாயச் சூழ்நிலைக்கேற்றபடி மாற இயலாத கலைகள் அழிந்துவிடும் நாடகம் அடிப்படையிலேயே சமுதாயத்தை ஒட்டியே வாழ்ந்து வந்த கலையாதலால் அதுவும் தன்னை இத்தகைய பரிணாம வளர்ச்சிக்கு உட்படுத்திக் கொண்டிருக்கும் என்று தோன்றுகிறது.*[8]

**நாடகம் என்ற சொல்**

*நாட்டின் சென்ற காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு அகம் - நாடகம் என்று ஆயிற்று என்று அவ்வை சண்முகம் கூறுவார்கள்.*

***நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் (தொல். அகம்-56)***

***நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த***
***வீசி வீங்கு இன்னியங் கடுப்ப (பெரும்பாண் 55-56)***

***பாடல் ஒர்த்தும் நாடகம் நயந்தும் (பட்டின - 113)***

*நாடக மேத்தும் நாடக கணிகை (சிலம்பு, பதிகம் - 15)*
*நாடக மடந்தையர் நலங்கெழுவீதி (மணி. 4-151)*
*என்பன நாட்டியம் என்னும் பொருளில் அமைந்தன.*

**சந்தம்**

*இது கூத்து சம்பந்தமான ஒரு நாடகத் தமிழ் நூல் இந்நூலை யாப்பருங்கல உரையாசிரியர் தமது உரையில் குறிப்பிடுகிறார்.*

**சயந்தம்**

*இதுவும் ஒரு நாடகத் தமிழ்நூல்.*

**அரங்கம்**

*அரண்மனையைச் சேர்ந்த நாடக அரங்கினைக் கூத்துப்பள்ளி என்றும் கோவிலில் உள்ள கூத்தாடும் இடத்தினைக் "கூத்தம்பலம்" என்றும் அழைத்திருக்கின்றனர். நாடக மேடைக்கு "நாயகப்பத்தி" என்றும் கூத்துக் காண்போர் இடத்துக்கு "அம்பலம்" என்றும் பெயர்கள் இருந்திருக்கின்றன.*

**திரை**

*மூவகைத் திரைகளின் பெயர்களை நாம் அறிய முடிகின்றது.அவை ஒருமுக எழினி, பொருமுக எழினி, சாந்து வரல் எழினி என்பன. ஒருமுக எழினி என்பது "ஓடு படம்" என்ற பெயரினை உடையது. அதாவது ஒரு பக்கம் தள்ளக்கூடியது. ஒரு திசை இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டு பக்கமும் தள்ளக்கூடிய அமைப்புடையது. பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்பன மேலே கட்டப்பட்டுக் கீழிறங்கி வரவும் மேலே மறைந்து செல்ல கூடிய திரைகளாகவும் உள்ளன.*

**முடிவுரை**

*ஒரு நாட்டினுடைய வரலாற்றை ஒரு வரலாற்று அறிஞன் மட்டும் எழுதிவிடுவதால் நிறைவடைந்து விடாது. உதாரணமாகத் தமிழக வரலாற்றைப் பல காலப் பகுதிகளாகவோ, குறிப்பிட்ட அரசின் காலங்களாகவோ வரலாற்றுப் பேரறிஞர்களான கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார், டி.வை.சதாசிவ பண்டாரத்தார், டாக்டர் இராசமாணிக்கனார், டாக்டர் கே.கே.பிள்ளை, கா. அப்பாதுரை முதலியோர் எழுதியுள்ளனர்.இதைப்போல் இங்கே ஆயப்பட்ட தமிழ் நாடகக்கலை வரலாறு மேலும் பலரால் ஆராயப்படுதல் வேண்டும்.*

*நடிப்புக் கலையைச் சொல்லிக் கொடுப்பதற்கென்று உரிய நிறுவனமாக அரசாங்க ஆதரவுடன் சென்னையில்* South Indian Film Chamber of Commerce *என்ற அமைப்பு இயங்கி வருகிறது. இவ்வமைப்பைப் போல பூனாவிலும், டில்லியிலும்* National School of Drama *என்ற அமைப்பும் இருந்து வருகிறது. ஒழுங்கு, நடிப்பிலும் நடிகனின் வாழ்க்கையிலும் அமைதல் வேண்டும்.*

*நாடகக்கலை அறிவு கல்விக் கழகங்களின் மூலம் ஒழுங்கு பெறல் வேண்டும். ஒழுங்கின்றிச் செல்லும்போது இக்கலையின் பெருமை தன் மதிப்பீட்டை இழந்து விடுகிறது.*

*கல்லூரிகளில் புதுமுக வகுப்புகளிலும், பட்டப் படிப்புகளிலும் நாடக நூல் பாடநூலாக இருந்து வருகிறது.இப்படி ஒரு நூலாக இல்லாமல் நாடகத்துறையை, பட்டப் படிப்பாகவோ,*

*டிப்ளமா படிப்பாகவோ அல்லது* Ancillary Subject *ஆகவோ ஆக்கலாம். இக்கலை அறிவைக் கல்லூரியில் மட்டும் கற்பிக்க வேண்டும் என்று எண்ணாமல் கல்வித் தொடக்க காலம் முதல் கற்றக்கொடுப்பது, வளரும் குழந்தையின் மனவளத்திற்கு ஊட்டச் சக்தியாக அமையும்.*

*நாடகக் காப்புக் கழகம் என்ற ஓர் தலைமை அமைப்பு நிறுவப்படுதல் வேண்டும். இத்தலைமை அமைப்பின் கீழ் நாடகத் தொடர்புடைய ஒரு பெரிய நூல் நிலையம், நாடகக் கண்காட்சி, நாடக விழாக்கள், மாநாடு போன்றவைகள் நடத்தப் பெறுதல் வேண்டும். 11-2-1944ஆம் நாளன்று ஈரோட்டில் தமிழ் மாகாண நாடகக்கலை அபிவிருத்தி மாநாடு ஒன்று சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது.*

*திருமண நிகழ்ச்சிகளில் அமைக்கப்படும் பாட்டுக்கச்சேரி, வாத்தியக்கச்சேரி இவைகளைத் தவிர்த்து அங்கு நாடகங்கள் போட வேண்டும் என்று கருதி ஔவை சண்முகம் அவர்கள் வாழ்வில் வசந்தம் என்ற நாடகத்தைப் பல திருமணங்களில் நடத்தக் காட்டினார். பொது மக்கள் கூடும் எல்லா நிகழ்ச்சிகளிலும் நாடகங்கள் நடைபெறச் செய்தல் வேண்டும். உலகத்தை நாடகமாகவும், மக்களை நடிகர்களாகவும் கற்பனை செய்த ஷேக்ஸ்பியரின் கனவை இக்கவின் திட்டத்தின் மூலம் எளிதாகப் பெறலாம்.*

**சான்றெண்விளக்கம்**


1. *தமிழ் நாடக சரித்திரம், பக். 39*
2. *மேலது பக்கம், பக். 148*
3. *தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.31)*
4. *மேலது பக்கம், பக்.40)*
5. *மேலது பக்கம், பக்.41)*
6. C.Abercromble, Pleinciples of Literary Criticism. *க.2*
7. *அ.ச.ஞானசம்பந்தம் இலக்கிய கொள்கை 164, தி.தெ.சை.நூ.கழகம், சென்னை பக். 282*
8. *எஸ்.வி.சகஸ்ரநாமம், நாடகக் கலையின் வரலாறு (1995) மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.பக். 71-72*


**பார்வை நூல்கள்**


1. *பேரா. சண்முகசுந்தரம்.சு, தமிழ் நாடகச் சரித்திரம், பதிப்பு டிசம்பர் 2008 (மு.ப)*
2. *ஆறு. அழகப்பன், தமிழ் நாடகத்தில் தோற்றமும் வளர்ச்சியும், பதிப்பு 2013 (மு.ப)*
3. *அ.ச.ஞானசம்பந்தம், இலக்கிய கொள்கை.*
4. C.Abercromble, Pleinciples of Literary Criticism.


## References


1. Shanmugasundaram, R., Tamil Nataka Charitram, December 2008.
2. Azhagappan, A., Tamil Nadagathil Thotramum Valarchiyum, 2013.
3. Gnanasambandham, A.S., Literary Policy.
4. Abercromble, C., Principles of Literary Criticism.